## நீங்களும் உதவலாம்

1. PEaCE நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சிகளில் தொண்டராக இணையுங்கள்.
2. சிறுவர் உரிமைகளையும் அவற்றை பாதுகாக்கும் வழிகளையும் கற்று கொடுங்கள்
3. சிறுவர்களுக்கு அநீதி விளைவிக்கும் நபர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்க PEaCE அமைப்பிற்கு உதவுங்கள்.
4. உங்கள் பிரதேசத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துங்கள். பீஸ் உங்களுக்கு அனுசரனை வழங்கும்.
5. இணையத்தின் மூலமாகவோ சுற்றுலா பயணிகளினூடாகவோ அல்லது வேறு வழியாகவோ சிறுவர்களுக்கு துஷ்பிரயோகம் நடந்தால் கண்டும் காணாதது போல் இருக்காமல் உடனடியாக எமக்கு அறிய தாருங்கள். நாங்கள் அவர்களுக்கு உதவுவோம்.










**எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு**

**(PEaCE / ECPAT Sri Lanka)**

165/2, துட்டுகெமுனு வீதி, கொஹுவல.

தொலைபேசி: +94 11 281 9397

கையடக்கத் தொலைபேசி: +94 70 550 7121

மின்னஞ்சல்: report@ecpatsrilanka.org

வலைத்தளம்: www.ecpatsrilanka.org

முகநூல்: ECPAT Sri Lanka

டுவிட்டர்: ECPAT Sri Lanka

# சிறுவர்களை பாதுகாக்க நீங்களும் ஒன்றிணையுங்கள்



PEaCE

ecpat SRI LANKA

## சிறுவர்களும் பாலியல் சுரண்டலும்

- உலகளாவிய ரீதியில் சுமார் பதினெட்டு இலட்சம் வரையிலான சிறுவர்கள் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.
- ஆட்கடத்தல் பல பில்லியன் டொலர் வியாபாரமாக மாறியுள்ளது.
- ஆட்கடத்தல்களில் 80% பாலியல் சுரண்டலோடு சம்பந்தப்பட்டவை. அவற்றில் 20% க்கு மேல் சிறுவர்களோடு தொடர்பானது.
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தோடு தொடர்புள்ள பல பில்லியன் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் இணையத்தளத்தில் காணப்படுவதுடன் அவை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன




## இலங்கையின் நிலை

- இலங்கையில் நாளாந்தம் 4 - 6 வரையான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இவை பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மட்டுமே.
- சிறுவருக்கெதிரான வன்முறையில் தகாப்புணர்ச்சி (incest), பாலியல் சுரண்டல், சிறுவர் தொழிலாளர், சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள், சிறுவர் கடத்தல், கற்பழித்தல், கொலை செய்தல், சிறுவர் திருமணம் போன்றவை அடங்கும்.
- உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.
- கணினி, கையடக்க தொலைபேசி மற்றும் இணையம் ஊடாகவும் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.
- முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களின் முறைகேடான பாவனையால் சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

## எங்களைப் பற்றி

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் (Protecting Environment and Children Everywhere) ''பீஸ்'' (PEaCE), சமூக சேவைகள் அமைப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அரச சார்பற்ற அமைப்பு, 1991ம் ஆண்டு முதல் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறது. கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாக பீஸ் அமைப்பு பல சாதனைகளுக்கு முக்கிய பங்காளியாக உள்ளது.

அவற்றில் சில:



- 1990: ECPAT International என்ற ஸ்தாபனத்தை நிறுவியது.
- 1993: சட்ட சீர்திருத்த அமைச்சரவை உபகுழுவில் அங்கத்துவம் பெற்றது.
- 1993: சிறுவர் மற்றும் பெண்களின் துஷ்பிரயோகத்திற்கு எதிரான பணியகத்தின் ஆரம்பம்.
- 1995: தண்டனை கோவைச் சட்ட திருத்தத்திற்கு பங்களித்தது.
- 1995: சுற்றுலா, கடல் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சினால் உருவாக்கப்பட்ட செயலணியில் அங்கத்துவம் பெற்றது.
- 1996: சிறுவர் பாதுகாப்பிற்கான ஜனாதிபதி செயலணியில் அங்கத்துவம் பெற்றது.
- 1997: சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான வழிகாட்டு குழுவில் அங்கத்துவம் பெற்றது.
- 1998: சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உருவாக்கம்.
- 2001: தேசிய செயற்திட்டத்தை உருவாக்குவதற்கான செயலணியில் அங்கத்துவம்.

## எமது செயற்பாடுகள்

- சமூகத்திலுள்ள அனைவருக்கும் சிறுவர் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சேவை வழங்குநர்கள், சிவில் / அரச அமைப்புகளின் திறமைகளை மேம்படுத்துவதற்காக பயிற்சி வழங்கல்.
- சுற்றுலா பிரதேசங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக மக்கள் குழுக்கள் அமைத்து அவற்றை வலுவூட்டுதல்.
- சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் சட்ட அமுலாக்கத்தை மேம்படுத்துவதற்கு அரசுடன் இணைந்து செயற்படல்.
- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக நீதி கேட்டு வழக்காடுதல்.
- சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குதல்.
- சிறுவர் துஷ்பிரயோக சம்பந்தமான ஆய்வுகள் நடத்துதல்.
- பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பாடசாலை செல்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர் மற்றும் குடும்பத்தினருக்கு உளவள ஆலோசனைகள் வழங்குதல்.

